# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.101/2022

## அ.சா. 6 (LW 10)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு. ராஜ்குமார்** | **தொழில்** | |
| **த/க பெயர்** | முருகையா | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **11.02.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 ,2 எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது எரியோடு, புது ரோடு வள்ளுவர் நகரில் குடியிருந்து வருகிறேன். செட்டிநாடு சிமிண்ட் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். வழக்கில் இறந்து பன்னீர்செல்வத்தை தெரியும். கடந்த 06.05.2021 அன்று பூபதி ராஜ் என்பவர் எனக்கு தொலைபேசி மூலம் தகவல் கொடுத்தார். புங்கம்பாடி பிரிவில் அவரது தகப்பனாருக்கு பிரச்சனை என வரச் சொன்னார். நான் எனது வீட்டிலிருந்து செட்டியார் ஓட்டலுக்கு சென்றேன். நான் போய் பார்த்த போது ஓட்டலுக்கு முன்புள்ள சிமிண்ட் தரையில் பன்னீர்செல்வம் இரத்தக்காயத்துடன் கிடந்தார். நான் அவர் அருகில் ரமேஷ் இருந்தார். நாங்கள் அவரை தூக்கும் போது அவர் வாயிலிருந்து இரத்தம் வந்தது. நான் வீரமணி என்பவருக்கு தொலைபேசி மூலம் தகவல் சொன்னேன். வாகனத்தை எடுத்து வருமாறு அவரிடம் சொன்னேன். மேற்படி வாகனத்தில் பன்னீர் செல்வத்தை ஏற்றி நானும் ரமேஷ், தங்கராஜ், வீரமணி ஆகியோர்கள் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றோம் . ரமேசுக்கு காயம்பட்டிருந்ததால் அவரை சிகிச்சையில் சேர்த்துக் கொண்டார்கள். பன்னீர்செல்வத்தை பார்த்த மருத்துவர்கள் மேல்சிகிச்சைக்காக மதுரைக்கு கொண்டு செல்லுமாறு அறிவுறுத்தினார்கள். மேற்படி சம்பவம் குறித்து நான் விசாரித்த போது பன்னீர் செல்வம் ஓட்டல் கடைக்கு இட்லி வாங்க சென்ற போது எதிரிகள்துரைராஜ், கார்த்தி ஆகியோர்கள் பன்னீர்செல்வத்தையும், ரமேசையும் அடித்து காயப்படுத்தியதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1,2 **<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

போலிசார் என்னை விசாரித்தபோது பூபதிராஜ் எனக்கு போன் செய்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. காயம்பட்ட பன்னீர்செல்வத்தையும், ரமேசையும் மருத்துவமனைக்கு கூட்டிச் சென்ற போது வேனில் நானும் உடன் சென்றதாக போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சென்றேன். அனுப்பி வைத்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. துரைராஜ், கார்த்தி ஆகியோாகள் பன்னீர்செல்வத்தை அடித்ததாக கேள்விப்பட்ட விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை, கேள்விப்பட்ட வகையில்தான் தெரியும். வேனில் நான் அடிபட்ட இருவரையும் கூட்டிக் கொண்டு எரியோடு தாண்டிதான் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு வந்தேன். வரும் வழியில் எரியோடு காவல்நிலையத்தில் புகார் கொடுக்கும் முயற்சி எதுவும் எடுக்கவில்லை.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.11 19:04:10 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.